Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 9, 2024

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 9, 2024 | ஒளி: 09 கதிர்: 230 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## வடக்கில் 50 பேர் நீரில் மூழ்கி மரணம்

எம்.றொசாந்த்

வடமாகாணத்தில் கடந்த ஆண்டு மட்டும் நீரில் மூழ்கி 50 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# சு.கவில் அதிரடி மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அதிரடி மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனடிப்படியில், கட்சியின் பதில் தவிசாளராக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நியமிக்கப்பட்டார்.

சுதந்திரக் கட்சியின் அரசியல் சபை கொழும்பு, இலங்கை மன்றத்தில், திங்கட்கிழமை (08) நடைபெற்றது. இதில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பங்கேற்றிருந்தார்.

தொடர்ச்சி P2



## "சந்திரிக்காவின் கூட்டம் சட்டவிரோதமானது"

முன்னாள் ஜனாதிபதி சந்திரகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தலைமையில் திங்கட்கிழமை (8) நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் சட்டவிரோதமானது என்றும் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளர் மராத்தி துஷ்மந்த மித்ரபால தெரிவித்தார். சட்டவிரோத செயல்.

தொடர்ச்சி P2



வடக்கு கிழக்கிலுள்ள

## நலன்புரி நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை

புலிகளின் பயங்கரவாதப் போரின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்கள் அனைத்தும் இவ்வருடம் மூடப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## "இலவச திட்டமென கேலியாக நினைக்காதீர்கள்"

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போசாக்குணவுத் திட்டம் மிகவும் முக்கியமானது. தாய்மார்கள் மற்றும் வயிற்றில் இருக்கும் குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான உரிமையை இது

தொடர்ச்சி P2

## "கிழட்டு நரியின் கடைசி கையாலாகாதனம்"

பாறுக் ஷிஹான்

கிழக்கு முஸ்லிம்கள் ஒன்று பட்டால் பேரம் பேசும் சக்தியை பெறலாம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியிருப்பது "கிழட்டு நரியின் கடைசி கையாலாகாதனமாக தெரிகிறது" என புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## மே முதல் ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்



2022/2023ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பொருளாதார சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் 6,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது, அதன்படி

தொடர்ச்சி P2



**சூரிய கிரகணம்...**

2024ஆம் ஆண்டின் முதவாவது சூரிய கிரகணம் திங்கட்கிழமை (8) நிகழ்ந்தது. இது, தென்மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஆசியா, ஆவுஸ்திரேலியா, ஆயிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், வட துருவம், தென் துருவம் ஆகிய பகுதிகளில் தென்பட்டது.
இலங்கை நேரப்படி, சூரிய கிரகணம் இரவு 9.12 மணிக்கு ஆரம்பமாகி, 2024 ஏப்ரல் 9ஆம் திகதி அதிகாலை 2.22க்கு நிறைவடைந்தது.



## மூவருக்கான தடை நீடிப்பு

அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கெஹெலியவின் விளக்கமறியல் நீடிப்பு

தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் விளக்கமறியல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தமிழ்Mirror

## E-paper திங்கள் முதல் வரும்

எமது வாசகர்கள் அனைவருக்கும் இனிய தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைக்கின்றோம். இந்த விடுமுறை நாட்களில், புதன்கிழமை (10) முதல், வெள்ளிக்கிழமை (12) வரையிலும் Tamil mirror E-paper வடிவமைக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, திங்கள்கிழமை (15) முதல் வழமைபோல வெளியாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். (ஆ+ர்)

## தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேச தீர்மானம்

க. அகரன

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்காகத் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## புதுமண தம்பதிகள் குழந்தை பெறுவதை நிறுத்திவிட்டனர்

கடந்த பத்து வருடங்களில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சிறுவர்களின் சேர்க்கை சுமார் நாற்பதாயிரம் குறைந்துள்ளதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

போலி பிரசாரம் முன்னெடுப்பு:

## மூவரை ஆஜராக பணிப்பு

டிஜிட்டல் மற்றும் ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் நிதி நிறுவனத்தை அவமதிக்கும் வகையில் தவறான மற்றும் சட்டவிரோத கருத்துக்களை இணையத்தில் வெளியிட்ட மூன்று சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# சு.கவில் அதிரடி மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த வாரம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## "சந்திரிக்காவின் கூட்டம் சட்டவிரோதமானது"

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், கட்சியின் தலைவருக்கு அரசியல் சபையைக் கூட்டுவதற்கான முழு அதிகாரம் இருப்பதாகவும், மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடை உத்தரவுக்கு அமைய கட்சியின் செயற்பாட்டுத் தலைவராக எந்தவொரு நியமனமும் செய்யப்பட வேண்டும் எனவும் பதில் செயலாளர் தெரிவித்தார். கடந்த மார்ச் 31ஆம் திகதி நடைபெற்ற அரசியல் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நிமல் சிறிபால டி சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்ட கட்டமைப்பிற்குள் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## மூவருக்கான தடை நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அந்த மூவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கொழும்பு மாவட்ட நீதவான் சந்துன் விதானவின் முன்னிலையில், திங்கட்கிழமை (08) அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரதி துஷ்மந்த மித்ரபால உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நியாயமான ஒழுக்காற்று விசாரணையின்றி தம்மைக் கட்சியில் இருந்து நீக்குவதற்குக் கட்சி செயற்குழு எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது எனவும் அது செல்லாதென அறிவிக்க வேண்டும் எனவும் கோரி சம்பந்தப்பட்ட மூவரும் மாவட்ட நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

## "கிழட்டு நரியின் கடைசி கையாலாகாதனம்"

இது பற்றி அக்கட்சியின் சிரேஷ்ட ஆலோசகர் முபாறக் முப்தி தெரிவித்திருப்பதாவது,

2000ஆம் ஆண்டு முழு கிழக்கு மாகாண முஸ்லிம்களும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸுடன் ஒன்றிணைந்து மிகப்பெரிய பேரம் பேசும் சக்தியாக அக்கட்சியை மாற்றினர்.

அதன் பின் என்ன நடந்தது? ஹக்கீமும் அவரின் கட்சியினரும் அமைச்சுப் பதவிகளையும், தவிசாளர் பதவிகளையும் பேரம் பேசி கிழக்கு மாகாண முஸ்லிம்களை நட்டாற்றில் கை விட்டனர்.

ஆனாலும், கிழக்கு முஸ்லிம்கள் மீண்டும் 2001லும் முழுமையாக ஒற்றுமைப்பட்டு ஹக்கீமை பலப்படுத்தினர். என்ன நடந்தது? மூதூர் அழிக்கப்பட்டது. ஜனாஸாக்கள் வாழைச்சேனையில் எரிக்கப்பட்டன. புலிகளுடனான பேச்சுவார்த்தையில் தனித்தரப்பை கூட பேரம் பேச முடியாத அளவு அமைச்சுப்பதவிகளுக்கு சோரம் போயிருந்தார் ஹக்கீம்.

அமைச்சராக பல தடவைகள் பதவி வகித்த ஹக்கீமினால் இன்று வரை கிழக்கு முஸ்லிம்கள் ஓர் உரிமையையும் பெற்றதில்லை.

> **கிழக்கு முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளை தனதும் தனது சகாக்களினதும் உல்லாச வாழ்க்கைக்குப் பேரம் பேசும் துரோகத்தை செய்து இளமையில் எதையும் சமூகத்துக்கு செய்யாத வந்த ரவூப் ஹக்கீம் இப்போது வயதான காலத்தில் கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளை வைத்து பேரம் பேசுவோம் என்கிறார்**

இவ்வாறு கிழக்கு முஸ்லிம்களை ஏமாற்றி, அவர்களின் வாக்குகளை தனதும் தனது சகாக்களினதும் உல்லாச வாழ்க்கைக்குப் பேரம் பேசும் துரோகத்தை செய்து இளமையில் எதையும் சமூகத்துக்கு செய்யாத வந்த ரவூப் ஹக்கீம் இப்போது வயதான காலத்தில் கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளை வைத்து பேரம் பேசுவோம் என்பது இளமை முதல் சமூகத்தை ஏமாற்றிய கிழட்டு நரியின் கடைசி தந்திரமாகும்.

கிழக்கு முஸ்லிம்கள், முஸ்லிம் காங்கிரஸை, முழுமையாகத் தோற்கடிக்காதவரை கிழக்கு முஸ்லிம்கள் ஹக்கீமினால் நன்மைக்கு பதில் தீமையையே தொடர்ந்தும் காண்பர் என புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## மே முதல் ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்

மார்ச் மற்றும் ஏப்ரல் வரையிலான நிலுவைத் தொகையை 2024 மே முதல் வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

அதன்படி, மார்ச் 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் மாதாந்தம் 6,000 ரூபாய் வீதம் 24 தவணைகளுக்கு இந்த புலமைப்பரிசில் தொகை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.presidentsfund.gov.lk) அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும். மேலதிக விவரங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை (www.facebook com/president.fund) like/follow செய்யுமாறு ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

மேலும், தரம் 1 முதல் தரம் 11 வரை பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தற்போது முடிவடைந்துள்ளதுடன், புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றோரின் பட்டியல் எதிர்வரும் நாட்களில் வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கவுள்ளது.

இந்தப் பட்டியல்களைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபாய் வீதம் 12 மாதங்கள் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்தப் புலமைப்பரிசில் தொகையும் 2024 மே மாதம் முதல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நலன்புரி நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை

தற்போது யாழில் மூன்று நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அங்குத் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 10. இதில் 9 குடும்பங்களுக்குக் காணிகள் விடுவிக்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஒரு குடும்பத்திற்கு மாத்திரமே தமது பூர்வீக காணிகளை வழங்குமாறு பலமாகக் கோரி வருகின்றனர்.

அவர்களுடன் கலந்து பேசி இணக்கப்பாட்டுக்கு வருமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களைக் கையளிக்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (7) அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் செலவநகர் நீர் சுத்திகரிப்பு நிலையம், உருதிபுரம் கிழக்கு நீர் சுத்திகரிப்பு நிலையம், வவுனியா மாவட்டத்தில் கங்கன்குளம் நீர் சுத்திகரிப்பு நிலையம், வவுனியா தெற்கில் அவரந்தலாவ நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை அமைச்சர் மக்களின் பாவனைக்குத் திறந்து வைத்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதுடன், அவர்களை அவர்களது பூர்வீக கிராமங்களில் மீள் குடியேற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மீள்குடியேற்றப் பிரிவினரால் ஒழுங்கமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றன.

தற்போது 1502 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் அனுமதிக்கப்படாமல் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. 212 குடும்பங்களுக்குக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும். காணி இல்லாத ஏனைய அனைவருக்கும் காணிகளை விரைவில் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர் அவர்களுக்கான காணிகள் எதிர்காலத்தில் விடுவிக்கப்படும் என மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

## "இலவச திட்டமென....

உறுதிப்படுத்துகிறது. எனவே இதனை வெறுமனே இலவசமாகப் பகிர்ந்தளிக்கும் திட்டமொன்று என கேலியாக நினைக்க வேண்டாமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பெண்களின் ஆரோக்கியத் துவாய் சுகாதார பிரச்சினை குறித்து தான் பேசியபோது சேறு பூசினர். இது குறித்து எமது குரல் தொடர்ந்து ஒலித்ததால், தற்போது பாடசாலை மாணவிகளுக்கு ஆரோக்கியத் துவாய் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதுவும் சமூக சேவை போன்றதொரு திட்டமே என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தேர்தல் வருடத்தில் இதுபோன்ற திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தினாலும், பொறாமை கொள்ளாது ஆரோக்கியத் துவாய் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துவதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் 532 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வில் திங்கட்கிழமை (08) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பில் பல்வேறு நபர்கள் வெவ்வேறு இடங்களில் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர், ஆனால், இவ்வாறான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பல பின்னணி காரணங்கள் இருக்கின்றன.

சுகாதார பிரதி அமைச்சராகக் கடமையாற்றிய போது, 2001ஆம் ஆண்டு உலக வங்கி சுகாதாரத் துறைக்கு வழங்கிய உதவியின் அடிப்படையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுத் திட்டத்தைத் தான் ஆரம்பித்தாலும், பின்னர் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் நிறுத்தப்பட்டு, மீண்டும் நல்லாட்சி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது அத்தியாயத்தை மையமாக வைத்து அடிப்படை உரிமை மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். ஆனால், இதில் பெண்கள்,

குழந்தைகள், சிசுக்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்வதற்கான உரிமைகள் உள்ளடக்கப்படவில்லை. அத்தியாயம் 6 இல் சில உத்தரவுகள் இருந்தாலும், இந்த உரிமைகள் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சேர்க்கப்பட வேண்டும், ஏனெனில், அவற்றை நீதிமன்றத்தில் சவால் விடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இது திருத்தப்படும் என எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் 50 பேர் நீரில் மூழ்கி மரணம்

இதில், கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 13 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 02 பேரும், மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 06 பேரும், வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 05 பேரும், முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 08 பேரும் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 16 பேருமாக வடக்கில் 50 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

"நாளாந்தம் இரண்டு அல்லது மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். எங்களின் தகவல்களின்படி வருடாந்தம் 700 - 800 பேர் இவ்வாறு இறக்கின்றனர். பண்டிகை காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது" என சுகாதார அமைச்சின் தொற்றா நோய், விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் சமூக வைத்திய நிபுணர் சமித்த சிறிதுங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேச தீர்மானம்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு கூட்டம், வவுனியா தனியார் விடுதியில் சனிக்கிழமை (06) இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளமை தொடர்பிலும் ஏனையவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். தற்போது இவ்விடயம் இங்கும் புலம்பெயர் தேசத்திலும் பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளது. சில சிவில் அமைப்புக்களும் இதனை முன்னெடுத்துச் செல்லும் பணியைச் செய்கின்றனர். இந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியானது தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளுடன் பேசவுள்ளோம். அத்துடன் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் முக்கிய அமைப்புக்களுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

அதற்காக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் உள்ள அணியொன்று செயற்படும். இவர்கள் தமிழரசுக் கட்சி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் பேச விரும்பும் கட்சிகளுடனும் கலந்துரையாடுவோம்.

தற்போது இலங்கையில் பொருளாதார பிரச்சினை மாத்திரம் மட்டுமே உள்ளது இனப் பிரச்சினை இல்லாதது போன்றதும் அது முடிந்து விட்டது போன்றதுமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இலங்கையில் பொருளாதார பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்ககப்படால்தான் அது சாத்தியம் என்ற விடயம் இருக்கின்றது. அதனைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு நாம் இந்த ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். எனவே, இந்த மாத இறுதிக்கிடையில் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் கலந்துரையாடுவோம் என்றார்.

## புதுமண தம்பதிகள் குழந்தை பெறுவதை நிறுத்திவிட்டனர்

குழந்தை பிறக்கும் எண்ணிக்கை குறைவடைந்தமையே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் தரவுகளை ஆராயும் போது அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதும் தெளிவாகக் காணப்படுகின்றது.

கல்வி அமைச்சின் தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 304,105 ஆகும்.

2022ஆம் ஆண்டில், முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை 11,889 குறைந்து 292,216ஆக இருக்கும்.

இதற்கிடையில், குடும்ப சுகாதார பணியகத்தின் தரவுகளின்படி, 2022ஆம் ஆண்டில், இலங்கையில் 258,235 பேர் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதில் 30,719 பேர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். இந்த தரவுகளின்படி, மக்கள்தொகை மற்றும் புள்ளிவிவர அறிக்கைகளின்படி, புதிதாகத் திருமணமான தம்பதிகள் கூட குழந்தைகளைப் பெறுவதை நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது.

## கெஹெலியவின் விளக்கமறியல் நீடிப்பு

இந்த வழக்கின் சந்தேகநபர்கள் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் திங்கட்கிழமை (08) முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதில் முதலாம், 2ஆவது, 3ஆவது, 4ஆவது, 6ஆவது, 7ஆவது மற்றும் 8ஆவது சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஐந்தாவது சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 10ஆம் மற்றும் 11ஆம் சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குவதா? இல்லையா, என்பதைத் தீர்மானிக்க எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## போலி பிரசாரம் முன்னெடுப்பு மூவரை ஆஜராக பணிப்பு

டிஜிட்டல் ஆல்டர்நேட்டிவ் லெண்டிங் அசோசியேஷன் (DALA) சங்கத்தில் உள்ள நிறுவனங்களால் இந்த வழக்குப் பதியப்பட்டுள்ளதோடு வெயங்கொடையைச் சேர்ந்த திவங்க சதுரங்க லக்ஷ்மன் எனப்படும் டுடு, கம்பளையைச் சேர்ந்த தரிந்த பண்டார திஸ்குமார மற்றும் மஹவயைச் சேர்ந்த நிலந்த குமார ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரதிவாதிகளிடம் இருந்து 4,250 மில்லியன் ரூபாய் நஷ்ட ஈடு கோரி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு அமுலில் உள்ள சட்டத்திற்கு அமைவாக ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் மேற்படி நிறுவனங்களுக்கு எதிராக பேஸ்புக் மற்றும் சமூக ஊடகங்களில் பிரதிவாதிகள் பொய்யான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு பிரதிவாதியிடம் இருந்தும் தலா 500 மில்லியன் ரூபாய் வீதம் கோரப்பட்டுள்ளதோடு இது வரை மேற்கொண்ட சேதத்திற்காக 350 மில்லியன் ரூபாய் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

சுதத் பெரேரா சட்ட நிறுவனத்தின் ஊடாக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர்கள் போலந்து, கசகஸ்தான், யுக்ரேன், செக் குடியரசு, ரூமேனியா, ஸ்பெயின், மோல்டோவா, வியட்நாம், பிலிபீன்ஸ்,கென்யா, இந்தியா, மெக்சிகோ, நைஜீரியா, கொலம்பியா மறறும் தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும் செயற்பட்டு வருவதோடு சட்டரீதியாகச் செயற்படும் வர்த்தகத்திற்கு எதிராகச் சட்டவிரோதமாகத் திட்டமிட்டு பிரசாரம் மேற்கொள்ளும் பிரதிவாதிகளுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்குமாறும் தொடர்ந்து செயற்படப் பிரதிவாதிகளுக்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவை ஆராய்ந்த அத்தனகல்ல மாவட்ட நீதவான் கேசர சமரதிவாகர, எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டார்.

# பழங்குடியினருக்கு விசேட குழு


நூருல் ஹுதா உமர்

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லூரில் வாழும் பழங்குடியின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில், அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்கத் திருகோணமலை அரசாங்க அதிபருக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில் தங்களின் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து கிழக்கு ஆளுநரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, நல்லூர் பிரதேசத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, வெளி ஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்துள்ளதுடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்பின் அவர்களின் பிரச்சினைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.



# உலக ஆரோக்கிய விழிப்புனர்வு தினம்

உலக சுகாதார ஸ்தாபனமானது 1948ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. அந்த நாளையே உலக ஆரோக்கிய தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளுடன் விழி ப்புணர்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது

உலக ஆரோக்கிய தினமானது இவ்வருடம் 2024ஆம் ஆண்டிற்குரிய தொனிப்பொருள் யாதெனில் "எனது ஆரோக்கியம், எனது உரிமை" (My Health, My rights) என்பதாகும். அதாவது எனது ஆரோக்கியத்தைப் பேணுவதில் எனக்கு உரிமை உள்ளது என்பதாகும். உலகின் மூலை முடுக்கெங்கிலும் நோய்களும் அனர்த்தங்களும் இறப்பையும் மற்றும் ஊனங்களையும் ஏற்படுத்திக்கொண்டு உள்ளன. ஆகவே, தான் இவ்வருடத்திற்கான குறித்த தொனிப்பொருள் தெரிந்தெடுக்கப்பட்டது, ஏனெனில், உலகின் எந்தப்பாகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சிறந்த தரமான சுகாதார சேவை, கல்வி, தகவல், தகுந்த குடிநீர், சுத்தமான காற்று, சிறந்த போசாக்கு உணவு, சிறந்த கட்டமைப்புடனான வீடு, இனப்பாகுபாடு இல்லாத சுதந்திரம் ஆகிய இவையெல்லாவற்றையும் உரிமையுடன் தாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே உருக்கமாக எதிர்ப்பாக்கப்படுகிறது.

இந்த வகையான உரிமைகளை மனிதருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின், முதலில் நாடுகளில் உள்ள சுகாதாரத் திட்டங்கள் பலமுடையதாய் இருக்க வேண்டும் மற்றும் சுகாதார பழக்கவழக்கங்களை ஊக்கப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்விடயத்தையே இம்முறை உலக ஆரோக்கிய தினத்தின் தொனிப்பொருள் வலியுறுத்துகின்றது.

இந்த வருடத்திற்கான தொனிப்பொருளை அமுல்படுத்துவதற்கு நாம் என்ன செய்யலாம் என்று சிந்திப்போம்.

1. பலதரப்பட்ட சுகாதார சவால்களிலிருந்து எனது ஆரோக்கியத்தை பேணிக்கொள்ள தேவையான அறிவை தகுந்த ஊடகங்களினூடாக பெற்றுக்கொள்ள வேண்டும். (உ-ம்:- உலக சுகாதார ஸ்தாபன வலையமைப்பு)

2. இந்த விழிப்புணர்வை எமது குடும்பம், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

3. சுகாதார அமைப்புக்களுடன் சேர்ந்து நாமும் இயங்குவதன் மூலம் எமது ஆரோக்கியத்தை தக்கவைத்துக்கொள்ள தேவையான சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

4. எமது ஆரோக்கியத்துக்கு நாமே பொறுப்பாளியாகுதல். அதாவது எமது உணவு, உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கை நடைமுறைகள் சார்பாக ஆரோக்கிய தெரிவுகளை கையாள்வதுடன், கிரமப்படியான வைத்திய பரிசோதனை மற்றும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள தவறக்கூடாது

மேற்கூறிய விடயங்களை சமகால சுகாதார சவால்களுடன் தொடர்புபடுத்த முடியும். சமகால சுகாதார பிரச்சினைகளாக கீழ்வருவனவற்றை கொள்ளலாம்

1. கொவிட்-19 இல் இருந்து மீண்டுவரல்:- கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பூசி பாவனை வந்திருந்தாலும் தொற்று நோயின் பின்னரான பாதிப்புக்களிலிருந்து வெளிவர முடியாமல் உள்ளமை.

2. உள சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு:- யாவர்க்கும் உள ஆரோக்கியத்தை பேணிக்கொள்ளுமாறு தகுந்த ஆதரவு கிடைக்க வேண்டும்.

3. தொற்றாநோயிலிருந்து தப்பித்துக்கொள்ளல்:- சலரோகம், இதயசார் நோய்கள் மற்றும் புற்றுநோய்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வாழ்க்கை நடைமுறையில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு எமது நாட்டில் பின்பற்றப்படும் சுகாதார விதிமுறைகளையும், ஆலோசனைகளையும் மதிக்க தலைப்படவேண்டும்.

## சிந்தனைத் துளிகள்

"தங்கம் மற்றும் வெள்ளியைக் காட்டிலும் எமது சுகாதாரமே மிகப்பெரிய செல்வமாகும்"
"சிறந்த சுகாதாரத்தை காசு கொடுத்து வாங்கமுடியாது"
"சிறந்த ஆரோக்கியம் என்பது ஒருவருக்கு கொடுக்கப்பட்ட ஆசிர்வாதமாகும்"
"வாழ்க்கை என்பது உயிருடன் இருப்பது அல்ல ஆரோக்கியமாக இருப்பதே"
"ஆரோக்கியமில்லாத வாழ்க்கை நரகத்திலிருப்பதற்கு சமம்"
"சிறந்த ஆரோக்கியத்துடன் நீங்கள் இருப்பீராயின், எல்லாம் உம்மைத்தேடி வரும்"

இதனால்தான் பிரபல்யமானவர்கள் சிலர் பின்வருமாறு கூறியுள்ளனர்.
"ஆரோக்கியமே மிகப்பெரிய சொத்து"
- Virgil
"ஆரோக்கிய மக்களே அந்நாட்டின் பலம்"
- Winston S.Churchill
"அடிப்படை மகிழ்ச்சி என்பது ஆரோக்கியமாய் இருத்தலே"
- Leigh Hunt

பேராசிரியர் ரா.சுரேந்திரகுமரன்
வைத்தியகலாநிதி பே.அ.டினேஸ் கூஞ்ஞ
வைத்தியர் ந .பிரபு
திருமதி ச.சஸ்ரூபி
திரு .இ.தர்சன்
திரு .சி.மலர்வர்ணன்
யாழ் ஆரோக்கிய நகரத் திட்டம்,
உலக சுகாதார ஸ்தாபனம்.

# கொம்பனித்தெரு இரட்டை மேம்பாலம்

கொம்பனித்தெரு, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் புகையிரத பாதைக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரட்டை மேம்பாலத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திங்கட்கிழமை (08) மக்களின் பாவனைக்காகத் திறந்து வைத்தார்.

இந்த திட்டத்தின் அடுத்தகட்டநிர்மானப் பணிகளை செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இந்தமுழுமையான திட்டத்திற்கு 5,278,081,272.43 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட மிகவும் பரபரப்பான வர்த்தக நகரமான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள புகையிரத கடவையின் காரணமாக நாளாந்தம் 03மணித்தியாலங்கள் விரயமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மாகா பொறியியல் (Maga Engineering) நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ. ஆர். பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அதலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


# அன்னதானத்தால் 120 பேர் பாதிப்பு

செ.தி.பெருமாள்

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷ்பான, வாழமலை பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு வழங்கப்படும் அன்னதானம் ஒவ்வாமையால் சுமார் 120 பேர் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (07) பதிவாகியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களான ஆண், பெண்கள் மற்றும் சிறு பிள்ளைகள் இச்சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தில் வழங்கப்பட்ட அன்னதான உணவை உண்ட பின்னர் பிற்பகல்



06.00 மணியளவில் வாந்தி, மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றியுள்ளதையடுத்து அவர்களை உடனடியாக மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

அவர்களின் பெரும்பாலானவர்கள் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதுடன், இன்னும் 40 பேர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



# த.மு.கூவின் பதுளை வேட்பாளர் அறிமுகம்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர் அறிமுகம், பதுளை மாவட்ட அமைப்பாளர் நியமனம் என்பவற்றிற்கான மாபெரும் பொதுக்கூட்டம் , பதுளை நிமல் சிறிபால டி சில்வா தபாலக கட்டிடத் தொகுதி கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும், வர்த்தகருமான பகி பாலச்சந்திரன் , மலையக மக்கள் முன்னணியில் அங்கத்துவம் பெற்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் பதுளை மாவட்ட அமைப்பாளராகவும், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் கூட்டணியின் சார்பாக களமிறங்கும் வேட்பாளராகவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

# ஓட்டோவை திருடியவர் சைக்கிளில் தப்பியோட்டம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டியை திருடிச் சென்ற ஒருவரை பொலிஸார் மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது, சந்தேகநபர் வீதியால் சென்ற மாணவனின் துவிசக்கர வண்டியைப் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற ஒருவர், தனது முச்சக்கர வண்டியை அருகில் நிறுத்தி விட்டு, திரும்பி வந்தபோது, தனது முச்சக்கர வண்டி களவாடப்பட்டதை அறிந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.



இந்நிலையில், களவாடப்பட்ட முச்சக்கர வண்டி, யாழ். இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக பயணித்தபோது, அதனை அப்பகுதியில் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் கண்ணுற்று, முச்சக்கர வண்டியை வழிமறித்துள்ளனர்.

அப்போது சந்தேக நபர் முச்சக்கர வண்டியை கைவிட்டு, வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவனின் துவிச்சக்கர வண்டியை பறித்துக்கொண்டு அதில் தப்பியோடியுள்ளார்.

முச்சக்கர வண்டியை மீட்ட பொலிஸார், தப்பிச் சென்றவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மாணவனிடமும் துவிச்சக்கர வண்டி பறிமுதல் செய்யப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளனர்.

# மன்னார் விபத்தில் ஹட்டன் இளைஞன் பலி

றொசேரியன் லெம்பட்

மன்னார் -தாழ்வுபாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகாமையில் ஞாயிற்றுக்கிழமை (7) மாலை இடம்பெற்ற விபத்தில் 22 வயதான இளைஞன் மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த (சந்துரு) சந்திரகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் தொழில் நிமித்தம் உணவகங்களில் தொழிலாளியாக பணிபுரிந்து வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (7) மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து இடம் பெற்று சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் இளைஞன் பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முளைக்கும் புத்தர் சிலைகளும் பறக்கும் பஞ்ச சீலங்களும்

பஞ்ச சீலங்கள் அல்லது ஐந்து நல்லொழுக்கங்கள் பௌத்தர்கள் மற்றும் பௌத்தர்கள் அல்லாத அனைவரும் பின்பற்ற வேண்டிய வகையில் புத்தர் எல்லா மனிதர்களின் நலனுக்காகவும் இதைப் போதித்தார். பஞ்ச சீலத்தைத் தானாக முன்வந்து பின்பற்ற வேண்டும். இந்த விதிகள் ஒருவரது வாழ்க்கையில் ஒருவர் சந்திக்கக்கூடிய வருத்தங்களை நீக்குகிறது என்பது ஐதீகமாகும்.

பௌத்த நாடான எமது நாட்டில் இந்த பஞ்ச சீலங்களை அச்சொட்டாகக் கடைப்பிடிப்போர் எத்தனை பேருள்ளனர் என்பது வினாவாகும். எனினும், ஒவ்வொரு நாளும் அதிகாலையில் வானொலிகள், தொலைக்காட்சிகளில் போதிக்கப்படுகின்றன. பூரணை (போயா) தினங்களில் முழுநாளும் போதிக்கப்படுகின்றன. பலரும் வெள்ளை ஆடையை அணிந்துகொண்டு விகாரைகளுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அன்றைய தினத்தில் மதுபானசாலைகள் முற்றாக மூடியிருக்கும் இறைச்சிக்கடைகள் இழுத்து மூடப்பட்டிருக்கும், ஒருசில பெட்டிக்கடைகளில் கோழி முட்டைகள் இருந்தாலும் போயா தினத்தில் விற்பனைச்செய்யப்படாது. அந்தளவுக்குப் புத்தருக்கு மிகவும் உயரிய நாளான போயா அனுஷ்டிக்கப்படும். வெசாக், பொசன் போயாக்கள் இன்னும் விசேடமாக இருக்கும்.

எனினும், நமது நாட்டை பொறுத்தவரையில் புத்தரினால் போதிக்கப்பட்ட ஐந்து நல்லொழுக்கங்களை விரல் விட்டு எண்ணக் கூடியவர்களைத் தவிர, பெரும்பாலானோர் அச்சொட்டாகக் கடைப்பிடிப்பதே இல்லை. பஞ்ச சீலங்கள் அல்லது நல்லொழுக்கங்களில், "வாழ்க்கையை மனக் கிளர்ச்சியுடன் செலுத்தாமல் இருப்பது", "தனக்குக் கொடுக்கப்படாததைத் தான் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது","பாலியல் வன்கொடுமையில் ஈடுபடாமல் இருத்தல்", "பொய்யான பேச்சிலிருந்து விலகிவிடுதல்", மற்றும் "மது போன்ற போதைப் பொருள்களிலிருந்து விலகி நிற்றல்" ஆகும்.

ஊடகங்களில் அன்றாடம் வரும் செய்திகளை பார்க்குமிடத்து, இந்த ஐந்து நல்லொழுக்கங்களும், கடுமையாக மீறப்படுகின்றமை திண்ணம். இல்லை, கடைப்பிடிப்பதே இல்லை. அவ்வாறு குற்றச் செயல்கள் மலிந்து கிடக்கின்றன. பௌத்தன், பஞ்ச சீலங்களை முறையாகக் கடைப்பிடித்தால், இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறாது. ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள் மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இல்லை. அவ்வாறானவர்களும் தங்களுடைய மதங்களில் போதிக்கப்பட்டவற்றை அடியோடு மீறுகின்றனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் இந்த நாடு, பௌத்த-சிங்கள நாடாகும். அதில், ஏனைய இனத்தவர்கள் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்பது தெட்டத் தெளிவாகவே கூறப்பட்டுள்ளது. சிறுபான்மையினங்களைச் சேர்ந்த தலைவர்களும் மக்களும் அவ்வாறே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், தங்களுடைய அதிகாரத்தைக் காண்பித்து, சிறுபான்மையினர் வாயையே திறக்கக்கூடாது என்றவகையில் பல அடாவடித்தனங்கள் அரங்கேற்றப்படுகின்றன. குறிப்பாக வடக்கு,கிழக்கில், சிறுபான்மையின மக்களின் செறிவைக் குறைக்கும் வகையில், புத்தர் சிலைகளை வைத்தல் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

போகிற போக்கைப் பார்த்தால் இது இறுதியாக இருக்காது. திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை, மார்ச் 5 வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக பஞ்ச சீலங்களை எதிர்ப்பார்ப்பது எவ்வாறு?

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள், அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன.

மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன்பிறந்தேன் எனத் சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது; எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்படுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள், வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்களை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம் அரசியல் வாதிகளை உலுக்கும்

# யூசுப் முப்தியின் கேள்வி

மொஹமட் பாதுஷா

இலங்கையில் முஸ்லிம் அரசியல்,அந்த சமூகத்திற்கே பயனற்றதாகி, சீர்கெட்டுப் போனதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இதனை மக்களும், அரசியல் வாதிகளும் நன்கு அறிவர். ஆனால், அரசியல்வாதிகள் அவற்றையெல்லாம் 'வசதியாக மறந்து' விடுகின்றார்கள். மக்கள் தேர்தல் வரும்போது அவர்களுக்கு 'பாவமன்னிப்பு' வழங்கி விடுகின்றார்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் பணம் மற்றும் பதவி ஆசை,சமூக சிந்தனையற்ற தலைவர்கள் மற்றும் எம்.பிக்களின் உள்வருகை, ஆட்சியாளர்கள் மற்றும் பெருந் தேசியக் கட்சிகளின் பிரித்தாளும் தந்திரம், அரசியல்வாதிகளுடன் இருக்கின்ற ஒட்டுண்ணிகளின் புத்திகெட்டதனம், அதிகாரமுள்ள அரசியல் வாதிகளை விரும்புகின்ற முஸ்லிம் சமூகத்தின் மனோநிலை... என பல விடயங்கள் இந்தக் காரணப் பட்டியலில் அடங்குகின்றன.

இவை தவிர இன்னுமொரு முக்கிய விடயமும் உள்ளது. அதாவது முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கும், அவர்களை வெளியில் இருந்து வழிநடத்துவதற்குமான ஓர் ஏற்பாடு இல்லாமல் போனமையும் கூட முஸ்லிம் அரசியலின் இழிநிலைக்கு பிரதான காரணமாகும்.

தமிழ்ச் சமூகத்தில் அல்லது பெரும்பான்மைச் சமூகத்தில் பலவிதமான அழுத்தக் குழுக்கள் உள்ளன. பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள், புலம்பெயர் சமூகம், துறைசார்ந்தவர்கள் மட்டுமன்றி சமயத் தலைவர்களும் ஏதோ ஒரு வகையில் அழுத்தக் குழுவாகச் செயற்படுகின்றமை கூர்ந்துநோக்கும்போது புரியும். முஸ்லிம்களுக்குள் இப்படியான ஒரு அழுத்தக் குழு இன்றுவரை இல்லை.

இதேவேளை, மதப் பெரியார்கள், சமயவழிகாட்டிகளின் பிரதான நோக்கம் அந்தந்த சமயம் சார்ந்த ஆன்மீக வழிகாட்டலாக இருந்தாலும் கூட, இலங்கையில் அதற்கப்பாலான ஒரு வகிபாகத்தை ஏனைய சமயத் துறவிகள் எடுத்திருக்கின்றார்கள் என்பது கண்கூடு. இது தவிர்க்கமுடியாததும் காலத்தின் தேவையுமாகும்.

பௌத்த பீடங்களும், இந்து சமயத் தலைவர்களும், ஏன் அண்மைக் காலத்தில் கத்தோலிக்க சமயத் தலைவர்களும் தமது மக்களை வழிப்படுத்துவதில் முக்கியமான பொறுப்பை ஏற்றுச் செயற்படுகின்றன. சமூகத்தையும் அரசியலையும் வழிப்படுத்தும் விடயத்தில் ஓர் அழுத்தக் குழுபோல செயற்படுகின்றார்கள் எனலாம்.

பௌத்த மக்களுக்குத் தமிழர்களுக்கு, கத்தோலிக்கர்களுக்கு ஏதாவது அநியாயம் நடக்கின்றபோது அந்தந்த சமூகத்தின் மத பெரியார்கள் கண்ணை மூடிக் கொண்டுபார்த்துக் கொண்டிருப்பதில்லை. மதபோதகர்கள் சிலருக்குள்ளேயும் அரசியல் புகுந்துள்ளது என்பது வேறுகதை.

> முஸ்லிம் மதப் பெரியார்கள் அரசியல்வாதிகளிற்கு ஜால்ரா அடித்துக் கொண்டு இருக்காமல், வாயைத் திறந்து பேச வேண்டும்

ஆனால், பேசவேண்டிய இடத்தில் தமது சமயத்தை பின்பற்றும் மக்களுக்காகப் பேசுவதற்குப் பௌத்த, இந்து, கத்தோலிக்க மதத் தலைவர்கள் தயங்குவதில்லை. துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் சமூகத்திற்கு இப்படியான ஒரு நிலைமை இல்லை என்பது ரகசியமான விடயமல்ல.

அரசியல்வாதிகளைத் தட்டிக்கேட்காத முஸ்லிம் புத்திஜீவிகள், சிவில் சமூகம் போல.... சமூகத்திற்காக முன்னிற்காத மத அமைப்புக்கள், அரசியல் தவறுகளைத் தட்டிக் கேட்காத மத தலைவர்களும் உள்ளனர்.

மத போதகர்களின் அறிவுரைகளை மதிக்காத தலைவர்கள், ஜம்மியத்துல் உலமா சபை போன்ற பிரதான மத அமைப்புக்களுக்கு முழுமையாகக் கட்டுப்படாத முஸ்லிம் மக்கள் கூட்டம், யதார்த்த சூழல் என பல விடயங்கள் இதன் பின்னணிக் காரணங்களாகக் கொள்ளப்படலாம்.

இருப்பினும், அரசாங்கங்கள் முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கின்றபோது, முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறுகின்ற போது, அரசியலில் மிகப் பெரிய பித்தலாட்டங்கள் நடக்கின்ற போது முஸ்லிம் மதப் பெரியார்களும், சமய அமைப்புக்களும் பெரிதாக வாயைத் திறந்து பேசுவதில்லை என்பது சர்வசாதாரணமான விவகாரம் அல்ல.

ஜம்மியத்துல் உலமா சபை ஹலால் சான்றிதழ் வழங்குவதற்கும், அதேபோல் உலமா சபை உள்ளிட்ட இதர முஸ்லிம் அமைப்புக்கள் எல்லாம் தலைப் பிறை பார்ப்பதற்கும் மட்டுமே உருவாக்கப்பட்டனவா? அல்லது இப்படியான ஒருவட்டத்தைப் போட்டுக் கொண்டு உள்ளுக்குள்ளே நிற்கின்றனவா? என்ற கேள்வி மக்களால் பல தடவை எழுப்பப்பட்டிருக்கின்றது.

அநேகமான ஊர்களில் பாடசாலைகள், சமூக நிறுவனங்களில் மட்டுமன்றி பள்ளிவாசல்களும் அரசியலோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. தேர்தல் பிரசாரத்திற்காக முஸ்லிம் சமய பெரியார்களும் பள்ளிவாசல்களும் மறைமுகமாகப் பயன்படுத்தப்படுவதுண்டு.

அரசியல்வாதிகளுக்கு வாக்குச் சேகரித்துக் கொடுப்பதில் ஒரு குறிப்பிட்ட பள்ளிவாசலின் நிர்வாகம் அல்லது ஒரு சமய அறிஞர் நேரடியாகக் களத்தில் இறங்கி பணியாற்றிய சம்பவங்களும் ஏராளம் உள்ளன. இதேபோல் சிங்கள ஆட்சியாளர்களைக் குளிர்விப்பதிலேயேஅதிக காலத்தைச் செலவழித்த தேசிய மட்ட போதகர்களும் இல்லாமலில்லை.

ஆனால், தேர்தலுக்குப் பிறகு முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும், தட்டிக் கேட்பதற்கும், அவர்களைச் சரியாக வழிப்படுத்தும் விடயத்தில் வெளியில் இருந்து ஓர் அழுத்தக் குழுவாகச் செயற்படுவதற்கும் மேற்குறிப்பிட்ட இந்த இஸ்லாமிய மதத் தலைவர்கள் முன்னிற்கவில்லை என்பது கவலைக்குரியது.

ஒவ்வொரு பிரதேசத்திலும். தேசிய மட்டத்திலும் இதுதான் யதார்த்தம் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். எனவே, முஸ்லிம் மதப் பெரியார்கள் அரசியல்வாதிகளிற்கு ஜால்ரா அடித்துக் கொண்டு இருக்காமல், வாயைத் திறந்து பேச வேண்டும் என்ற கருத்துகள் சமூக சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்தப் பின்னணியில், இலங்கையின் முக்கியமான மார்க்க அறிஞர்களுள் ஒருவராகக் கருதப்படும் யூசுப் முப்தியின் அண்மைய கருத்து கவனிக்கப்பட வேண்டியதாகின்றது. முஸ்லிம் அரசியல்வாதிகளைப் பார்த்து அவர் எழுப்பியுள்ள அடுக்கடுக்கான கேள்விகள், முஸ்லிம் அரசியலின் குரல் வளையை இறுக்கிப் பிடித்து உலுக்கியுள்ளன.

'நான் நோன்பு பிடித்துக்கொண்டு முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு ஓர் உண்மையைக் கூறுகிறேன். முஸ்லிம் மக்களின் அரசியல் பிறநிதிகளுக்குக் கிடைத்துள்ள ஆசனம், பதவி நிரந்தரமானதல்ல. அதைவிட்டு நீங்கள் விலகிப் போகாவிட்டாலும் கூட, மக்களின் மனங்களில் இருந்து நீங்கள் எப்போதோ போய்விட்டீர்கள். அதுதான் யதார்த்தம்.'

'நீங்கள் சமூகத்துக்காக என்ன செய்திருக்கிறீர்கள்? என்ன கதைத்திருக்கிறீர்கள்? அரசியல்வாதிகளான உங்களைக் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் எந்தப் பிரச்சினை முடிந்திருக்கின்றது என்று பட்டியலிட்டுக் கூறுங்கள் பார்ப்போம்' என்று அவர் கேள்வி யெழுப்பினார்

'காணிப் பிரச்சினை தொடங்கி சட்டப் பிரச்சினைகள் முஸ்லிம் அரசியல் வாதிகள் தங்களுடைய அரசியலின் ஊடாக தீர்வு கண்டிருக்கின்றீர்களா? அப்படித் தீர்வு கண்டிருந்தால் சொல்லுங்கள்'என்று அவர் சவால் விடுத்துள்ளார்.

'சமூகத்தின் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள், இனியும் வாழப் போகின்றீர்கள் என்பதே கசப்பான உண்மை. வருகின்ற தேர்தல் காலங்களிலும் அதையே நீங்கள் செய்யப் போகின்றீர்கள்.

ஆகவே எங்களுக்காக, சமூகத்திற்காகக் குரல் கொடுக்கின்ற, நாட்டுக்காக அரசியல் செய்கின்ற அரசியல்வாதிகளே தேவையாகவுள்ளது. எனவே, கட்சி அரசியலை விட்டு சமூகத்திற்காக அரசியல் செய்ய முன்வாருங்கள்,

அதைவிடுத்து, கட்சிசார் அரசியலையே தொடர்ந்தும் நீங்கள் செய்வீர்கள் என்றால், இறைவன் (அல்லாஹ்) நிச்சயமாக உங்களை வாழவிடமாட்டான்' என்று யூசுப் முப்தி கூறியுள்ளார். ஒரு மார்க்க அறிஞராகவோ சமூக செயற்பாட்டாளராகவோ யூசுப் முப்தி முன்வைத்துள்ள கருத்து முன்மாதிரியானதும் முக்கியமானதும் ஆகும்.

பொதுவாக அரசியல்வாதிகளுக்குச் சார்பாகப் பேசுகின்ற அல்லது கண்டும் காணாமல் மௌனமாக இருந்துவிட்டு மார்க்க போதனைகளை மட்டும் கூறிச் செல்கின்ற இஸ்லாமிய வழிகாட்டிகளின் வழக்கமான ஒழுங்கில் இருந்து இது மாறுபட்டதாகத் தெரிகின்றது.

இந்த மாற்றத்தையே முஸ்லிம் சமூகம் நீண்டகாலமாக வேண்டிநிற்கின்றது. அதனை இன்று யூசுப் முப்தி தொடக்கி வைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

இந்த வழியில், முஸ்லிம் சமூகத்திற்கு வெளியில் இருந்து நடக்கின்ற அநியாயங்களை மட்டுமன்றி. சமூகத்திற்கு உள்ளிருந்து முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொறுப்பற்ற அரசியலையும் அநியாயத்தையும் தட்டிக்கேட்க ஜம்மியத்துல் உலமா சபை மற்றும் பிறையைத் தீர்மானிப்பதற்காகக் கூடுகின்ற இஸ்லாமிய அமைப்புகள் தொடங்கி ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமய அறிஞர்களும், மதப் பெரியார்களும் முன்வரவேண்டும்.

## கடிதங்கள்

### தீர்வை பெற்றுத் தாருங்கள்

முல்லைத்தீவில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற நலன்புரிக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியம் என வங்கிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதில் பல குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இடைத் தங்கல் முகாம்களில் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், முதியோர் அடையாள அட்டைகள் என்பவற்றிற்கு நலன்புரி கொடுப்பனவகள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது வங்கிகளினால் தேசிய அடையாள அட்டை இருந்தால்தான் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால போர் காரணமாக சகல ஆவணங்களும் தொலைந்து, தேசிய அடையாள அட்டைப் பெற்றுக் கொள்வதில் பல குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில், நலன்புரி முகாம்களில் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை பாவிக்கும் முதியவர்களுக்கான அடையாள அட்டையில் கூட தேசிய அடையாள அட்டையின் இலக்கம் உள்ள போதும், வங்கிகளினால் தேசிய அடைய அட்டை தான் வேண்டும் என கேட்பதால் பல குடும்பங்கள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உள்ளன.

இது தொடர்பில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

# வடக்கு மீனவர்களின் ஓயாத போராட்டம்





ஜே.ஏ.ஜோர்ஜ்

“அது ஒரு சனிக்கிழமை, நான் எனது வலைகளை எடுப்பதற்காகக் கடலுக்குச் சென்றேன். வலை நிறைய மீன்களை எதிர்பார்த்துச் சென்ற எனக்கு அங்கு அதிர்ச்சியே மிஞ்சியது. ஏனென்றால், நான் விரித்து வைத்திருந்த வலைகள் அங்கு இல்லை. எனது வலைகளை இழுவை படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் சேதப்படுத்தி விட்டனர். ஆனால், இது முதன்முறையாக நடக்கும் சம்பவம் இல்லை” - இவ்வாறு தனது கதையைக் கூறும் மீனவரான ரெஜினோல்ட், தனது கடந்த கால அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய தனது போராட்டம் தீவிரமடைந்திருப்பதாகக் கூறுகின்றார்.

20 ஆண்டுகளாகத் தனது வாழ்க்கைக்காகக் கடல் அலைகளுடன் போராடி வரும் ரெஜினோல்ட் மட்டுமன்றி, வட மாகாண மீனவர்களில் அதிகளவானவர்கள் தற்போது கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். இலங்கை கடற்பரப்பிற்குள் இழுவை படகுகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் முன்னெடுக்கும் மீன்பிடி நடவடிக்கைகளே இந்த நெருக்கடிக்குக் காரணமாக உள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த ரெஜினோல்ட் தனது தந்தையுடன் இணைந்து நீண்டகாலம் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், திருமணத்துக்குப் பின்னர் தற்போது தனியாகத் தொழில் செய்கின்றார்.

“நான் என் படகை மோட்டார் இல்லாமல் பயன்படுத்துகிறேன். மோட்டார் ஒன்றை வாங்க என்னிடம் போதுமான பணம் இல்லை. அதனால் என்னால் அதிக தூரம் செல்ல முடியாது. கடந்த காலங்களில் மீன்பிடிக்கப் பாரம்பரிய வலைகளைப் பயன்படுத்தினேன். இழுவை படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் எனது வலைகளைச் சேதப்படுத்தி விட்டனர். எனவே, இப்போது மீன்பிடிக்க சிறிய வலையைப் பயன்படுத்துகிறேன். இதனால், முன்பு போல் மீன் பிடிக்க முடியவில்லை. கடலில் இரண்டு மூன்று மணி நேரம் மாத்திரமே செலவிட முடிகின்றது. எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். எனது மூத்த மகன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான். அவர்களுக்காக நான் பல செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. பொருட்களின் விலை முன்பைவிட அதிகமாக உள்ளது. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவது இப்போது மிகவும் கடினமாக உள்ளது” என்கிறார் ரெஜினோல்ட்.

அமெரிக்க பாதுகாப்பு பல்கலைக்கழகம் 2008ஆம் ஆண்டு துருக்கியின் இஸ்தான்புல் நகரில் ஏற்பாடு செய்திருந்த செயற்குழுக் கூட்டத்தில் கலாநிதி சனத் டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கையின்படி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லை மூன்று கடல் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் வங்காள விரிகுடா, நடுவில் பாக்கு நீரிணை, தெற்கில் மன்னார் விரிகுடா என இந்த கடல் எல்லைகள் உள்ள நிலையில், பாக்கு நீரிணை ஊடாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சராசரி தூரம் சுமார் 32 கிலோமீற்றர்கள் என அறிக்கை கூறுகிறது.

கச்சத்தீவில் இருந்து இந்தியாவின் ராமேஸ்வரம் வரையிலான தூரம் சுமார் 14 கடல் மைல்கள், அதாவது சுமார் 26 கிலோ மீட்டர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து கச்சத்தீவு வரை சுமார் 60 கிலோமீட்டர் தொலைவான கடற்பரப்பில் தனது அதிகாரத்தைக் கொண்டுள்ள இலங்கை கடற்படை, சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடலுக்குள் நுழையும் இந்திய இழுவை படகுகள் குறித்து அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. எவ்வாறாயினும், இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய இழுவை படகுகள் பிரவேசிப்பது நாளாந்தம் இடம்பெறுவதாக வட பகுதி மீனவ சங்கத் தலைவர்கள் கூறுகின்றனர்.

“இது ஒரு தீவிரமான பிரச்சினை. இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை உள்ளிட்டவர்கள் தேவையான நடவடிக்கை எடுக்காதமையே இந்தப் பிரச்சினை தொடர்வதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஏராளமான இந்திய இழுவை படகுகள் இலங்கை கடல் பகுதிக்குள் நுழையும் நிலையில், கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் மற்றும் கைப்பற்றப்படும் இந்திய இழுவை படகுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

“சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.





இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இழுவை படகுகள் வட பகுதி மீனவர்களுக்குச் சொந்தமானதைப் படகுகளை விட பெரியவை. அவை தினமும் வடக்கு கடல் பகுதிக்குள் நுழைவதால், ஏராளமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

“இதனால் வடபகுதி மீனவர்களின் வருமானம் பாதிக்கப்படுவதுடன், இந்திய இழுவை படகுகளால் இலங்கை மீனவர்களின் வலைகளுக்குச் சேதம் ஏற்படுகின்றது. அத்துடன், எமது மீன்பிடி வளம் பறிபோகிறது. எமது மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளைச் சேதப்படுத்திய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன”- என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவில் இருந்து இழுவை படகுகள் வருவதைத் தடுக்கும் வகையில் இலங்கையில் சட்ட அமைப்பு இருப்பதாகவும் எனினும், அவற்றால் நடைமுறையில் இலங்கை மீனவர்களால் எந்தவிதப் பயனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என, அன்னராசா சுட்டிக்காட்டினார்.

1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி படகுகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 04ஆவது பிரிவின்படி, அனுமதியின்றி மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு மீன்பிடி படகுகளை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க பயன்படுத்தக்கூடாது என்று கூறுகிறது.

அத்துடன், இலங்கை கடற்பரப்பிற்குள் வெளிநாட்டுப் படகுகள் பிரவேசித்தால், மீன்பிடிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், அந்தப் படகில் உள்ள மீன்பிடி சாதனங்களை முறையான முறையில் தடுத்து வைக்க வேண்டும் என்று சட்டத்தின் 05வது பிரிவு கூறுகிறது.

வெளிநாட்டுப் படகுகளை நிறுத்தவும், சோதனைகளை நடத்தவும், பிடியாணையுடன் அல்லது இல்லாமலும் படகுகளைக் கைப்பற்றவும், தனிநபர்களைக் கைது செய்யவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில், இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டதுடன், இலங்கையில் உள்ள ஆயுதப்படைகளின் தளபதிகள் மற்றும் அதன் அமுலாக்கத்துக்காக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைவர் ஆகியோருக்கு பொறுப்பை வழங்கும் கூடுதல் சரத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

வெளிநாட்டுப் படகுகள் மூலம் இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்தால் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். இந்தக் குற்றம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் ஒரு மாதத்துக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான அமைச்சருக்கு விதிமுறைகளை உருவாக்கும் திறன் உட்பட விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1981ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தின் கீழ் இலங்கைக் கடற்பரப்பில் நுழைவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான நடைமுறைகளைக் கோடிட்டுக் காட்டும் விதிமுறைகள் வெளியிடப்பட்டன.

(தொடரும்)

# கவலை வேண்டாம்





70 வயதாகும் நடிகர் ஜாக்கிசானின் வயதான தோற்றத்தை பார்த்து அவரது ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கமல், ரஜினி ஆகியோர்களுக்கும் 70 வயதானாலும் அவர்கள் இன்னும் ஆரோக்கியமான உடல் நிலையில் இருக்கின்றனர். எனினும், அதே வயதான ஜாக்கிசான் மிகவும் வயதான தோற்றத்தில் இருப்பதை பார்த்து ரசிகர்கள் தங்கள் கவலையை தெரிவித்திருந்தனர்.

ஆனால், இது குறித்து ஜாக்கிசான் விளக்கம் அளித்துள்ளார். அந்த விளக்கத்தில், “அண்மையில் வெளியான என்னுடைய புகைப்படத்தை பார்த்து இணையத்தில் பலரும் கவலை அடைந்ததாகவும், எனது உடல்நிலை குறித்து விசாரித்து வருவதையும் அறிகிறேன். தயவு செய்து யாரும் வருத்தப்பட வேண்டாம் அந்த புகைப்படம் உண்மையானது அல்ல, நான் ஒரு படத்தில் நடித்து வருகிறேன், அதற்காக போடப்பட்ட வேஷம் தான் அந்த புகைப்படம்.

எனவே, அந்த படத்திற்கான தோற்றத்தை வைத்து இதுதான் எனது உண்மையான தோற்றம் என்று தவறாக நினைக்க வேண்டாம். என்று தெரிவித்துள்ளார்.

# ஜோதிகாவின் ஆசை?





கடந்த சில ஆண்டுகளாக சூப்பர் ஹிட் படங்களின் இரண்டாம் பாகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில், தற்போது ஜோதிகாவுக்கும் இரண்டாம் பாக ஆசை வந்து விட்டது.

ஜோதிகா நடிப்பில் ‘உடன்பிறப்பு’ திரைப்படம் கடந்த 2021இல் வெளியானது. அண்ணன் தங்கை பாசத்தை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட இந்த படத்தில் ஜோதிகாவின் அண்ணனாக சசிகுமார், கணவராக சமுத்திரக்கனி நடித்திருந்தார்கள்.

ரா.சரவணன் இயக்கத்தில் உருவான இந்த படத்தின் இரண்டாம் பாகம் குறித்த ஆலோசனை கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில், தற்போது ‘உடன்பிறப்பே 2’ கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

விரைவில் ஜோதிகா நடிக்கும் ‘உடன்பிறப்பே 2’ படம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் முதல் பாகம் போலவே இரண்டாம் பாகத்திலும் அண்ணன் தங்கை சென்டிமென்ட், எமோஷனல் காட்சிகள் அதிகம் இருக்கும் என்றும் இந்த படம் ஜோதிகாவுக்கு ஒரு திருப்புமுனையை கொடுக்கும் என்றும் கூறப்படுகின்றது.

# நனவாகிய நயன்தாராவின் கனவு



நடிகை நயன்தாரா தனது வீட்டின் மொட்டை மாடியில் புதிய அலுவலகத்தை கட்டி உள்ளதுடன், தனது கனவு நனவாகியுள்ளதாக புகைப்படங்களை பகிர்ந்துள்ளார்.

லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா ஒரு திரைப்படத்தில் நடிக்க 10 கோடிக்கு அதிகமாக வாங்கி வரும் நிலையில், அவர் சென்னை உட்பட பல இடங்களில் ரியல் எஸ்டேட்டில் ஏராளமாக முதலீடு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

அண்மையில் சென்னை போயஸ் கார்டனில் ஒரு வீட்டை அவர் வாங்கியதாக கூறப்படும் நிலையில், அந்த வீட்டின் மொட்டை மாடியில் தற்போது அவர் ஒரு அலுவலகத்தை கட்டி முடித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகத்தை கட்டி முடித்ததால் தனது கனவு நினைவாகியதாகவும் புதிய ஆரம்பம் தனக்கு ஏற்பட்டு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், இந்த அலுவலகம் குறித்த புகைப்படங்களையும் அவர் பகிர்ந்து உள்ள நிலையில் அந்த புகைப்படங்களை பார்த்து ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



தெஹ்ரான்

# “ஒதுங்கி இருங்கள்”

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கசில் ஈரான் தூதரகம் ஒன்று அமைந்துள்ளது. இதன் மீது, இஸ்ரேல் சில நாட்களுக்கு முன் திடீரென வான்வழி தாக்குதலை நடத்தியது. இந்த சம்பவத்தில் ஈரானின் ஆயுத படைகளில் ஒன்றான இஸ்லாமிய புரட்சி காவல் படையை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர்.

இதில், மூத்த தளபதிகளான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெஜா ஜகேடி மற்றும் மற்றொரு உயரதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் முகமது ஹதி ஹாஜி ரகீமி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்தனர். இதனை ஈரான் அரசும் உறுதி செய்தது. இதனால், அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரானும் உறுதி பூண்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கு ஈரான் கடிதம் ஒன்றை அனுப்பியது. ஈரான் ஜனாதிபதியின் அரசியல் விவகாரத்திற்கான பணியாளர் துணை தலைவர் முகமது ஜம்ஷிதி எழுதிய அந்த கடிதத்தில், நெதன்யாகுவின் வலையில் சிக்க வேண்டாம். அதில் இருந்து, அமெரிக்கா விலகி இருக்க வேண்டும். அதனால், நீங்கள் தாக்குதலில் இருந்து தப்புவீர்கள் என தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலாக, அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று ஈரானிடம் அமெரிக்க அரசு கேட்டு கொண்டுள்ளது என ஜம்ஷிதி கூறியுள்ளார்.

எனினும், ஈரான் அனுப்பிய தகவல் பற்றி அமெரிக்கா எதுவும் தெரிவிக்கவில்லை.

# மும்பைக்கு முதல் வெற்றி




ஐபிஎல் கிரிக்கெட் லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி கேபிடல்ஸ் அணியை வீழ்த்தியது. இந்த சீசனில் தொடர்ச்சியாக 3 தோல்விகளைப் பெற்ற பிறகு முதல் வெற்றியை ஞாயிற்றுக்கிழமை (07) ஆட்டத்தில் மும்பை அணி பெற்றுள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில். முதலில் விளையாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 234 ஓட்டங்களை குவித்தது.

பின்னர் 235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் விளையாடிய டெல்லி அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு205 ஓட்ங்களை எடுத்து தோல்வி கண்டது.

மும்பை அணி தொடர்ச்சியாக 3 தோல்விகளைப் பெற்ற பின்னர் முதல் வெற்றியை பெற்றதால் மும்பை ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். அதே நேரத்தில் டெல்லி அணி 5 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றி, 4 தோல்விகளைப் பெற்றுள்ளது.



# டேனியல் காலின்ஸ் சாம்பியன்

சார்லஸ்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் திங்கட்கிழமை (08) நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் டேனியல் காலின்ஸ் ரஷியாவின் டாரியா கசட்கினாவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆட்டத்தில் டேனியல் காலின்ஸ் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் மூலம் 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் டாரியா கசட்கினாவை வீழ்த்தி டேனியல் காலின்ஸ் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார் .

ஜப்பான் பார்முலா 1 கார்பந்தயம்:




# வெர்ஸ்டப்பென் முதலிடம்

பார்முலா 1 கார்பந்தயம் உலகம் முழுவதும் 24 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 4-வது சுற்றான ஜப்பான் கிராண்ட்பிரி போட்டி அங்குள்ள சுசூகா ஓடுதளத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) நடந்தது. இதில் 307.471 கிலோ மீட்டர் தூரத்தை நோக்கி 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

முதல் வரிசையில் இருந்து புறப்பட்ட நடப்பு சாம்பியன் நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 1 மணி 54 நிமிடம் 23.566 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்ததுடன், அதற்குரிய 26 புள்ளிகளை தட்டிச் சென்றார். இந்த சீசனில் அவரது 3ஆவது வெற்றி இதுவாகும்.

அவரை விட 12.535 வினாடி மட்டுமே பின்தங்கிய மெக்சிகோ வீரர் செர்ஜியோ பெரெஸ் 2ஆவதாக வந்து 18 புள்ளியும், கார்லல் செயின்ஸ் (ஸ்பெயின்) 3ஆவது இடம் பிடித்து 15 புள்ளியும் பெற்றனர். 7 முறை சாம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹாமில்டன் 9ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

4 சுற்று முடிவில் வெர்ஸ்டப்பென் 77 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறார். 2ஆவது இடத்தில் செர்ஜியோ பெரெஸ் (64 புள்ளிகள்) உள்ளார். இதன் 5ஆவது சுற்று போட்டி வருகிற 21ஆம் திகதி சீனாவில் நடக்கிறது.



வொஷிங்டன்

# பாலியல் வலையில் வீழ்த்திய இளம்பெண்

அமெரிக்காவில் 23 வயது இளம்பெண் தன்னை 14 வயது சிறுமி என கூறி பாடசாலை மாணவர்கள் பலரை பாலியல் விருப்பத்திற்கு பயன்படுத்தி கொண்ட சம்பவம் நடந்துள்ளது. இதுபற்றி நியூயோர்க் போஸ்ட் வெளியிட்ட செய்தியின்படி, அலைசா ஆன் ஜிங்கர் என்ற இளம்பெண் பாலியல் விருப்பத்துடன் டீன் ஏஜ் சிறுவன் ஒருவனை அணுகியுள்ளார்.

ஜிங்கர் கைதுக்கு பின், 4 சிறுவர்கள் “இதேபோன்று நாங்களும் பாதிக்கப்பட்டு உள்ளோம்” என கூறியுள்ளமை பொலிஸாரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.



லண்டன்

# மனைவியை கொன்று 224 துண்டுகளாக்கிய கணவன்

இங்கிலாந்து-செரிமொனியல் மாகாணம் லிங்கொன் பகுதியை சேர்ந்தவர் நிகோலஸ் மெட்சன் (வயது 28). இவரது மனைவி ஹொலி பிரம்லி (வயது 26). இருவரும் கடந்த 2021இல் திருமணம் செய்து கொண்டனர். திருமணமான சில மாதங்களில் இருவருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டதையடுத்து, தனது மனைவி வளர்த்த செல்லப்பிராணிகளை கொடூரமாக கொலை செய்துள்ளார். அதேபோல், திருமணமாகி 16 மாதங்களாக மனைவி ஹொலியை அவரது குடும்பத்தினர் வீட்டிற்கு அனுப்பாமல் நிகோலஸ் துன்புறுத்தியுள்ளார். இந்நிலையில், தனது மகளை கடந்த சில நாட்களாக தொடர்பு கொள்ள முடியவில்லை என்று ஹொலியின் பெற்றோர் கடந்த ஆண்டு மார்ச் 18ஆம் திகதி பொலிஸில் புகார் அளித்துள்ளனர். அதன்பின்னர் நடத்திய விசாரணைகளின் போதே மனைவியை கொன்று உடலை 224 துண்டுகளாக வெட்டிய விபரம் அம்பலமாகியுள்ளது.

# விலகினார் குஷ்பு



எலும்பு முறிவு பிரச்சினையால் மக்களவைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடியவில்லை என்றும், பிரசாரத்தில் ஈடுபடுவதில் இருந்து ஓய்வு அளிக்குமாறும் கோரி பாரதிய ஜனதா கட்சி தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவுக்கு, தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது, புதுடெல்லியில் கடந்த 2019இல் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக இந்த பிரச்சினையுடன் இருந்து வருகிறேன். தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தாலும் கூட இன்னும் எனக்கு குணமாகவில்லை. எனது உடல் நிலையை மனதில் கொண்டு, பிரசாரத்தில் ஈடுபடவேண்டாம் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர் என்றார்.



கூடைப்பந்தாட்ட போட்டியில்

# காரைதீவு அணி சாதனை



அம்பாறை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற விளையாட்டு விழாவின் கூடைப்பந்தாட்ட போட்டிகள் இடம்பெற்றன.

காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்ற போட்டியில், காரைதீவு பிரதேச செயலக அணி 48 க்கு 37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிப்பெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

இரண்டாமிடத்தை கல்முனை வடக்கு பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

வி.ரி.சகாதேவராஜா

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 09, ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.